**தேதி :** 24.09.2025 **SC.No. :** 316/2022 PW :**2** பெருமாள்ராஜ்

(1 மற்றும் **2 ம் எதிரிகள் ஆஜரில்லை. இதர எதிரிகள் ஆஜர். கு.வி.மு.ச.**317-**ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் ஆஜர்.**)

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

06.00 மணிக்கு அச்சன்புதூர் காவல்நிலையத்தில் இருந்து கிளம்பி சம்பவயிடத்திற்கு சென்றோம். எந்த வாகனத்தில் சம்பவயிடத்திற்கு சென்றோம் என்றால் காவல் ஆய்வாளர் வாகனத்தில் சென்றோம். சம்பவசமயத்தில் எனக்கு இரவு நேர பணி ஓய்வு, காலையில் என்னை அழைத்திருந்தார்கள். எதிரி மதிசெல்வம் வைத்திருந்த சாக்குப்பையை சோதனை செய்தபோது அந்த சாக்குபையில் SBBL துப்பாக்கி வைத்திருந்ததை பார்த்து விட்டதாக சொல்லியுள்ளதை நானும் பார்த்தேன், ஆய்வாளரும் பார்த்தார். அந்த துப்பாக்கியை உடனே ஆய்வாளர் கைப்பற்றினார் என்றால் சரிதான்.

அதன்பின்பு, எதிரி மதிசெல்வம் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றால் சரிதான். ஆய்வாளர் அவர்கள் சொல்ல சொல்ல ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. ஒப்புதல் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் தான் எழுதினார். எதிரி மதிசெல்வத்தை விசாரிக்கும் போது எத்தனை மணி என்றால் காலை 06.15 மணியிருக்கும். நான் காவல்நிலையத்திற்கு வரும் போது காலை 08.15 மணியிருக்கும். பாக்கெட் டைரியில் அன்றாட நிகழ்வுகளை எழுதி வைக்கும் பழக்கம் உண்டா? என்றால் உண்டு. இந்த வழக்கு சம்பவத்தை பாக்கெட் டைரியில் குறித்து கொண்டேனா? என்றால் அந்த நேரத்தில் பாக்கெட் டைரி இருந்ததா என்று

எனக்கு ஞாபகமில்லை. இந்த சம்பவம் சம்பந்தமாக ஆய்வாளரிடம் நான் தனி அறிக்கை எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். எதிரியை கைது செய்யும் போது ஆய்வாளர் கையில் துப்பாக்கி எதுவும் வைத்திருந்தாரா? என்றால் எனக்கு ஞாபகமில்லை.

இந்த வழக்கு சம்பந்தமாக ஆய்வாளர் என்னை விசாரிக்கும் போது அன்றைய தினம் காலை 06.30 மணியிருக்கும். நான் சொல்லச் சொல்ல ஆய்வாளர் எழுதிக்கொண்டார் என்றால் சரிதான். துப்பாக்கி தோட்டாக்களை கைப்பற்றியவுடன் சம்பவயிடத்தில் வைத்து SHO சீல் வைக்கப்பட்டதா? என்றால் அது பற்றி எனக்கு ஞாபகமில்லை. நான் துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு கொண்டு சென்றேனா? என்றால் நான் கொண்டு செல்லவில்லை. ஆய்வாளர் விசாரணையின் போது, கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் தோட்டாக்களில் சக்திமான் 12 எக்ஸ்பிரஸ் என எழுதப்பட்டிருந்ததா? என்று சொல்லவில்லை என்றால் சரிதான்.

நான் சொன்ன மாதிரி, சொன்ன நாள், நேரத்தில் நான், ஆய்வாளர்கள் மற்றும் காவலர்கள் சகிதம் ரோந்திற்கு செல்லவில்லை என்றாலும், எதிரிகள் மதிசெல்வம், பால்பாண்டி, பிச்சைக்கனி, இசக்கித்துரை ஆகியோர்களை 04.08.2015 அன்று சொன்ன நேரத்தில் கைது செய்யவில்லை என்றாலும் சரியல்ல. மதிசெல்வம் என்னிடம் சாட்சிகள் மீராக்கனி, மாடசாமி முன்பாக எந்தவித ஒப்புதல் வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றாலும், அவர்களிடமிருந்து துப்பாக்கி, தோட்டாக்கள், மோட்டார் சைக்கிள் எதுவும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் சரியல்ல. அன்றைய தினம் எதிரிகள் சந்தனபாண்டி, சங்கர்

ஆகியோர் சம்பவயிடத்திற்கு வரவில்லை என்றாலும், அவர்கள் அங்கிருந்த தலைமறைவாகவில்லை என்றாலும் சரியல்ல. வீட்டிலிருந்த எதிரிகளை கூட்டி வந்து காவல்நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சி தயார் செய்யப்பட்டு, எதிரிகள் மீது பொய் வழக்கு பதிவு செய்யப்பட்டு, அதற்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –**

இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2025.09.25 11:34:32 +0530